## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
## O.S. No.243/2023

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | **வா.த.சா. 1** |
| பெயர் | அம்சவள்ளி |
| க/பெ | கண்ணன் |
| வயது | |
| ஊர் | |
| வட்டம் | |
| மாவட்டம் | |
| தொழில் | |

மேற்படி சாட்சி இன்று 03.06.2026 நீதிமன்றத்தில் ஆஜராகி உறுதிமொழி சட்டம் 1967 பிரிவு 6 ன் படி அமர்வு எழுத்தரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியும் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கிற்குரிய விவரங்கள் அனைத்தையும் நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். என்னுடைய அப்பா ராயருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் பட்டு மற்றும் தனம். பட்டுவின் மகள் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் தனத்தின் மகள் என்றால் சரிதான். இந்த விவரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்பதற்கு கவனக்குறைவாக விட்டுவிட்டேன் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது தந்தைக்கு சொந்தமான சொத்துக்களை தான் முறையாக பிரிவினை செய்து எனது அம்மாவிற்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். வா.தா.சாஆ 8 கிரைய உடன்படிக்கையை எங்கு வைத்து தயார் செய்தோம் என்றால் விழுப்புரம் ஆஞ்சநேயா கோவிலில் வைத்து தயாரித்தோம். அதை

எழுதியவர்பெயர் எனக்கு ஞாபகமில்லை. அதில் சாட்சி கையொப்பம் இட்டவர்கள் எனது ஊரை சேர்ந்த குமரன், குபேரன் அவர்களை நான் தான் அழைத்து வந்தேன். அந்த சமயத்தில் 1ம் பிரதிவாதியும் அவருடன் மற்றொரு நபரும் வந்திருந்தார்கள் அவரின் பெயர் எனக்கு தெரியாது. அந்த நபரை சாட்சியாக விசாரிக்கவில்லை. கிரைய உடன்படிக்கையில் நான் தான் 1ம் பிரதிவாதியை அணுகி கிரையம் கேட்டதாக இருக்கிறது என்றும் அவர் அவருடைய தேவைக்காக ஒப்பந்தம் எழுதியதுபோல் இல்லை என்றுசொன்னால் சரியல்ல. 50 செண்ட் விஸ்திரணம் உடைய சொத்தை கிரையம் செய்வதாக தான் பேசப்பட்டது என்றும் ஒரு செண்ட் எவ்வளவு என்று தனியாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதில் 3 லட்சம் முன்பணமாக கொடுத்ததாகவும் 2 லட்சம் செலுத்துவதற்கு கால அவகாசம் எழுதப்பட்டது என்றும் ஆனால் எதற்காக கால அவகாசம் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி அந்த சொத்தை ஒரு நபருக்கு செங்கல் அறுப்பதற்காக குத்தகைக்கு விட்டுள்ளார்கள் என்பதால் அதனை மாற்றி தருவற்தாக தான் கால அவகாசம் சொல்லியிருக்கிறேன் என்றும் ஆனால் இந்த விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த நபர் யார் எந்த ஊரைச் சேர்ந்தவர் எவ்வளவு காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது போன்ற விவரங்களை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து குத்தகைக்கு விடப்பட்ட விவரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உடன்படிக்கை தேதிக்கு எவ்வளவு நாட்கள் முன்பாக குத்தகைக்கு விட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சுமார் 2 மாதத்திற்கு முன்பே தெரியும். உடன்படிக்கை தேதி அவர் அந்த இடத்தில் கல் அறுத்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சாட்சி மறுபடியும் அந்த நபரின் பெயர் பாபு என்றும் அவர் குச்சிபாளையத்தில் சேர்ந்தவர் என்றும் சொல்கிறார். அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும் அவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர் காலி செய்துவிடுவதாக சொன்னார். அவர் காலி செய்யாததால் அவரை காலி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம். ஆனால் இந்த விவரத்தை என்னுடைய வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பிள்ளைகளுக்கு நடந்த எந்த நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான் அவர்களும் சொல்லவில்லை. 2ம் பிரதிவாதி எனது சித்தப்பாவின் மருமகள் என்றால் சரிதான். அவருக்கு 1ம் பிரதிவாதி

வழக்கு சொத்தை 01.09.2022 தேதியில் கிரையம் கொடுத்ததாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விவரம் தெரியும் என்றால் தெரியும். அந்த ஆவணம் தான் வா.த.சா.ஆ 9 என்றால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதி அமுதாவின் 5 கையெழுத்துக்கள் உள்ளது. வா.த.சா.ஆ 8ல் 2 இடங்களில் 1ம் பிரதிவாதியின் கையெழுத்து இருக்கிறது என்றால் சரிதான். வா.த.சா.ஆ 9 ல் எவ்வித திருத்தங்களும் இல்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ 8 ல் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு முன்பாக உள்ள தலைப்பெழுத்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ 9ன் படி 2ம் பிரதிவாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு தீர்வை முதலியவைகளை அவரே செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த சொத்து மொத்தம் 5 பாகங்களாக பிரிக்கப்பட்டு அதில் ஒரு பாகம் எனக்கு கிடைத்தது மற்ற 3 பாகங்களும் என்னுடன் பிறந்தவர்களுக்கும், ஒரு பாகம் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்தது அதில் மற்ற 3 நபர்களின் பாகத்தை நான் ஏற்கனவே கிரையமாக வாங்கிவிட்டேன். பல ஆண்டுகளுக்கு முன்பே 1ம் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல ஆனால் குடும்ப நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதில்லை.என் கணவர் 1ம் பிரதிவாதியிடம் பேசிக்கொள்ளமாட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுப்பதாக 1ம் பிரதிவாதி எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்தியது இல்லை என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திகொண்டு 3 லட்சம் முன்பணம் பெற்றதும் இல்லை என்றும் 2 லட்சத்தை பெற்றுககொண்டு 6 மாத காலத்திற்குள் கிரையம் எழுதி தருவதாக வாய்மொழியாகவும் எழுத்துமொழியாகவும் எந்த உறுதிமொழி அளிக்கிவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ 8 பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான் உண்மையிலேயே பணம் கொடுத்திருந்தால் பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல.1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டு ஏற்கனவே மற்ற 3 பாகங்களையும் நான் வாங்கிவிட்டதால் 2ம் பிரதிவாதிக்கு பிரச்சனை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக என் கணவர் மூலமாக வா.த.சா.ஆ 8 உடன்படிக்கையை மோசடியாக ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள எந்த வித பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல்

செய்திருக்கிறேன் என்றும் இந்த வழக்கு அனுமதிக்கக்கூடியதல்ல என்று

**சொன்னால் சரியல்ல.**

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(Sd/– S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.